# தியாகராசர் கல்லூரி, மதுரை – 625 009

## சிவத்திரு கருமுத்து தி. கண்ணன் நினைவு

## திருவாசகம் ஒப்புவித்தல் போட்டி - 2024

பேரன்புடையீர்

தேனினும் இனிய திருவாசகம் என்னும் செழுந்தமிழ்ப் பனுவலை இளம் தலைமுறையினரிடம் பரவலாக்கம் செய்ய வேண்டும் என்னும் பெரு நோக்கத்துடன் பள்ளி, கல்லூரி பயிலும் மாணவர்களுக்கு, சிவத்திரு கருமுத்து தி. கண்ணன் அவர்கள் நினைவாகத் திருவாசகம் ஒப்புவித்தல் போட்டியை மதுரையிலுள்ள தியாகராசர் கல்லூரி பின்வரும் வகையில் நடத்தவிருக்கிறது.

**பிரிவு – 1 : மழலையர் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு**

போட்டிக்குரிய பகுதி : சிவபுராணம் (95 அடிகள்)

**பிரிவு – 2 : ஆறாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு**

போட்டிக்குரிய பகுதி : கோயில் மூத்த திருப்பதிகம், கோயில் திருப்பதிகம் (20 பாடல்கள்)

**பிரிவு – 3 : ஒன்பதாம் வகுப்பு முதல் பன்னிரண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு**

போட்டிக்குரிய பகுதி : திருப்பொற்சுண்ணம், திருப்பொன்னூசல் (29 பாடல்கள்)

**பிரிவு – 4 : கல்லூரி - பட்டப் படிப்பு, பட்டமேற் படிப்பு வகுப்பில் பயிலும் மாணவர்களுக்கு**

போட்டிக்குரிய பகுதி : அடைக்கலப் பத்து, அருட்பத்து, பிடித்த பத்து (30 பாடல்கள்)

**மாவட்ட அளவிலான முதற்கட்ட போட்டிகள்**

(மாவட்ட தலைநகரங்களில் ஜூன் மாதம் நடைபெறும்)

| | |
|---|---|
| **முதற்பரிசு** | **ரூ. 2,500** |
| **இரண்டாபரிசு** | **ரூ.1,500** |
| **மூன்றாம் பரிசு** | **ரூ. 1,000** |

**இறுதிப்போட்டி**

(ஜூலை இரண்டவது வாரத்தில் மதுரை தியாகராசர் கல்லூரியில் நடைபெறும்)

| | |
|---|---|
| **முதற்பரிசு** | **ரூ. 25,000** |
| **இரண்டாபரிசு** | **ரூ.15,000** |
| **மூன்றாம் பரிசு** | **ரூ.10,000** |

## பங்கேற்பாளர்களுக்குரிய குறிப்புகள்

- போட்டியில் கலந்துகொள்ள விரும்பும் மாணவர்களை, அந்தந்த பள்ளி / கல்லூரி பொறுப்பாசிரியர்கள் தேர்வுசெய்து தியாகராசர் கல்லூரி இணையதளத்தில் இருக்கும் மின் விண்ணப்பத்தின்வழி அவர்களை விண்ணப்பிக்கச் செய்தல் வேண்டும்.

- ஒரு பள்ளியிலிருந்து ஒரு பிரிவுக்கு அதிகபட்சமாக 5 மாணவர்கள் பங்குபெறலாம்.

- மாவட்ட அளவிலான போட்டிகள் நடைபெறும் நாள், இடம், போட்டி ஒருங்கிணைப்பாளர் உள்ளிட்ட விவரங்கள் பள்ளி / கல்லூரி முதல்வருக்கு மின்னஞ்சல் / கடிதம் / தொலைபேசி மூலமாகத் தெரிவிக்கப்படும்.

- போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்கள் அனைவருக்கும் பங்கேற்புச் சான்றிதழ் வழங்கப்பெறும்.

- மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்கள் இறுதிப்போட்டிகுத் தேர்வு செய்யப்பெறுவர்.

- இறுதிப்போட்டியில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கும் அவர்களது பொறுப்பாசிரியருக்கும் விதிமுறைகளுக்கு உட்பட்டு பயணப்படி வழங்கப்படும்.

- ஒவ்வொரு பிரிவுக்கும் உரிய திருவாசகப் பதிகங்களைக் கல்லூரி இணையதளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ளலாம்.

- பிற தகவல்களுக்கு தியாகராசர் கல்லூரியின் இணையதளத்தைப் பார்க்க: www.tcarts.in

- மேலதிக விவரங்களுக்கு

| | | |
|---|---|---|
| முனைவர் மு. அருணகிரி | - | 88380 70755 |
| முனைவர் சு. காந்திதுரை | - | 94420 26738 |
| முனைவர் அ. செந்தில்நாராயணன் | - | 94445 04767 |
| முனைவர் சீ. சரவணஜோதி | - | 96002 66345 |

**முனைவர் து. பாண்டியராஜா**
முதல்வர்

**திரு. கருமுத்து க. தியாகராசன்**
செயலர்